**செய்தி வெளியீடு எண்: 322** **நாள்: 19.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (19.6.2013) விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில், நடைபெற்றது.

இவ்வாண்டு 35 லட்சம் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், செயல்பட்டு வரும் சேவை மையங்கள், பொருட்களை பாதுகாப்பாக பேக்கிங் செய்தல், பொருட்களை வைப்பதற்கான அறைகள் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு கே. ராஜாராம், இஆப, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இஆப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு எம். சந்திரசேகரன், இஆப, வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு.எம்.ஜெயராமன், இஆப., மற்றும் இதர உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:–
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை